
## திராவிடத்தால் வாழ்கிறோம்

764

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

99

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த வடகாடு த.நல்லதம்பி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# வடகாடு த.நல்லதம்பி

## ‘வடகாடு தந்த கொள்கைச் சிங்கம்!’



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் இருந்து, தஞ்சை மாவட்டம், ஆவணம் செல்லும் வழியில் உள்ள ஊர் வடகாடு. போக்குவரத்து அரிதான, 1950-களில், ஊரின் கடைக்கோடியில் இருந்த ஒரு தேநீர் கடைக்கு வியாபார நிமித்தமாக வந்து செல்வார், புதுக்கோட்டை பெரியண்ணன். புதுக்கோட்டையில் இருந்து சைக்கிளில் வரும் அவர், தனது வியாபாரத்துடன் சுயமரியாதை அரசியலையும், அந்தக் கடையில் இருந்த இளைஞரிடம் விதைத்துச் செல்வார். இரண்டு இளைஞர்களும் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டக் கழக முன்னோடி அன்பில் அவர்களிடம் அரசியல் பயின்று, கழகத்தின் செயல்பாடுகளில் அழுந்தக் கால் ஊன்றினர்.

அந்தத் தேநீர் கடை பின்னாட்களில், கழகத்தின் படிப்பகமாக, பாசறையாக ஆலங்குடி சுற்றுவட்டாரப் பகுதிக்கு கழக அரசியலைத் தூக்கிச் சுமந்தது. அந்த இளைஞர் வடகாடு த.நல்லதம்பி. பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன் பிறப்பு. மாவட்டக் கழகத்தினருக்கு வடகாட்டார்.

### பகுத்தறிவாளர் கழகம்

பெற்றோர் தவசி - தையல்நாயகி. அடித்தட்டு விவசாயக் குடும்பம் என்பதால், முதல் தலைமுறையாக கல்விக்கூடம் சென்றவர், நல்லதம்பி. அந்த ஊரின் நடுநிலைப் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர், திருச்சியை மையமாகக் கொண்டு இயங்கிய ‘பகுத்தறிவாளர் கழகத்தில்’ தன்னை இணைத்துக் கொண்டு சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்பும் பணியில் ஈடுபடலானார். அப்போதே திராவிடக் கொள்கைகளைப் பரப்ப, ‘**முத்தமிழ் நாடக மன்றம்**’ எனும் அமைப்பினை உருவாக்கி, நண்பர்களுடன் இணைந்து நாடகங்களை நடத்தி இருக்கிறார்.

அந்தக் காலகட்டத்தில் புதுக்கோட்டையில் கோலோச்சிய செல்வந்தர்களுக்கும், மிராசுகளுக்கும் எதிராக சுயமரியாதை அரசியல் பேசுவது எளிதானதல்ல; பல தாக்குதல்களுக்கும் ஆளானவர் நல்லதம்பி.

கழகம் தொடங்கப்பட்டபோதே, தொடக்கக் கால உறுப்பினராகப் பதிவுசெய்து கொண்டதுடன், 1952-ஆம் ஆண்டு அந்தக் கிராமத்தில் கிளைக் கழகத்தினைத் தொடங்கி, முதல் செயலாளராக, அப்பகுதியில் கழக வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

### சிறைப்பட்டியல்

சிறைப்பறவை போல தனது நாட்களை, தலைமைக் கழகத்தின் போராட்டங்களுக்குச் செல விட்டவர் நல்லதம்பி. 1958-ஆம் ஆண்டு, கருப்புக்கொடிப் போராட்டத்தில் கைது; சிறைவாசம். 1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வைக் கண்டித்து அணி அணியாக நடந்த மறியல் போராட்டத்தின்போது, ஜூலை 19-ஆம் தேதி கைது செய்யப்பட்ட நல்லதம்பி, நவம்பர் 8-ஆம் தேதிதான் விடுதலை செய்யப் பட்டார்.

1963-ஆம் ஆண்டு மொழிப் போர்க்களத்தில் தமிழ்நாடே கொந்தளித்த நிலையில், ‘அரசியல் சட்ட நகல்’ எரிப்புப் போராட்டத்துக்குப் பெயர் அளித்தவர்கள் பட்டியலில் ‘ஆலங்குடி காந்தி பூங்கா நல்லதம்பி’ என பெயரைப் பதிவு செய்தது தலைமைக் கழகம். 1964-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் தேதி கைது செய்யப்பட்ட அவர் 6 மாத கடுங்காவல் தண்டனை பெற்று திருச்சி, மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அவரது குற்றப்பத்திரிகையில், போராட்டத்துக்குத் தூண்டுதல் என கலைஞர் பெயரும், உடந்தையாக இருந்தவர் என என்.வி.என் பெயரும் இடம் பெற்றிருந்தன.

1978-ஆம் ஆண்டு கருப்புக் கொடிப் போராட்டத்தின்போது, தடியடியில் காயமுற்று சில காலம் சிகிச்சையில் இருந்தார். 1980-ஆம் ஆண்டு பால் கமிஷன் அறிக்கை வெளியிட்டதற்காக கலைஞர் கைது செய்யப்பட்டபோது, அதைக் கண்டித்து நடந்த போராட்டத்தில் ஆலங்குடியில் கைது செய்யப்பட்டு, 40 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். 1982-ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு 2 மாதங்கள் சிறை, என தொடர்ச்சியாக கழகத்தின் போர்க்குணமிக்க தளகர்த்தராக உறுதிகுலையாமல் நின்றார்.

> **“1974-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராக, மருத்துவமனை வளாகத்திலேயே அமர்ந்து, பரிந்துரைக் கடிதங்களைக் கொடுத்தவர் என அவரை நினைவுகூர்கின்றனர் மக்கள்.”**

### ‘ஒரே வழி’

1967-ஆம் ஆண்டு, ஆலங்குடி தொகுதியின் கழக வேட்பாளராக கே.வி.சுப்பையா அவர்களை அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. சுப்பையா அவர்களின் வெற்றிக்காக ‘**ஒரே வழி**’ என்கிற நாடகத்தை எழுதி, கழகத் தோழர்களுடன் தொகுதி முழுவதும் நடத்தி, பிரச்சாரம் செய்தார் நல்லதம்பி. மண்ணெண்ணெய் விளக்கொளியில் அவர் நடத்திய நாடகங்கள், கழகத்துக்கு வாக்களிப்பதுதான் விடியலுக்கு ஒரே வழி என மக்கள் மனதில் அரசியலை விதைத்தன. கே.வி.சுப்பையா வெற்றிபெற்று, கலைஞரின் முதல் அமைச்சரவையிலும் இடம்பிடித்தார்.

1968-ஆம் ஆண்டு, அண்ணா முதல்வரானதும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக சீரணியை உருவாக்கியபோது, அந்த இயக்கத்தின் ஆலங்குடி வட்டத் தலைவராக அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டவர் நல்லத்தம்பி.

கழக சட்ட விதிகளின்படி, வட்டச் செயலாளர் பதவிக்குப் பின்பு, தொடங்கப்பட்ட ஒன்றியச் செயலாளர் பொறுப்பில், அன்றைய திருச்சி மாவட்டம், ஒருங்கிணைந்த திருவரங்குளம் ஒன்றியச் செயலாளராக பொறுப்பேற்றார். பின்னர், புதுக்கோட்டை மாவட்டம் பிரிக்கப்பட்டபோதும், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளராக, பெரியண்ணன் அவர்களுடன் இணைந்து அரசியல் பணிகளை வீச்சாகச் செய்தவர் நல்லதம்பி.

மிசா நெருக்கடி நிலையின்போது, முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்ட வர்களில் நல்லதம்பியும் ஒருவர். மிசா சட்டம் ஜனநாயகத்தின் மீதான அச்சுறுத்தல் என முழக்கமிட்ட கலைஞர், மாவட்டக் கழக மாநாடுகளை நடத்தி, கண்டன தீர்மானங்களை நிறைவேற்றினார். திருவரங்குளம் ஒன்றியக் கழகத்தை, மாவட்டக் கழக அலுவலகத்தில் கூட்டி, மிசா சட்டத்துக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றி, தலைமைக் கழகத்துக்கு அனுப்பினார் நல்லதம்பி.

### மருத்துவமனை-களம்

1970-ஆம் ஆண்டு காலகட்டங்களில் தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பை, கலைஞர் வலுவாகக் கட்டி எழுப்பியபோது, அணி அணியாக கழகத்தினரும் அதற்கு உடன் நின்றனர். மருத்துவமனை ஆலோசனைக் குழு என கழகத்தினர் பலரும், கிராம மக்களையும் மருத்துவமனைகளையும் இணைக்கும் பணிகளைச் செய்தனர். 1974-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராக, மருத்துவமனை வளாகத்தி லேயே அமர்ந்து பரிந்துரைக் கடிதங்களைக் கொடுத்தவர் என அவரை நினைவுகூர்கின்றனர் மக்கள்.

1984-ஆம் ஆண்டுவரை ஒன்றியச் செய லாளராக கழகப் பணியாற்றிய நல்லதம்பி அவர்களை, ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட விவசாய அணிச் செயலாளராக அமர்த்தினார் கலைஞர். 2005-ஆம் ஆண்டுக்குப் பின் வயதுமூப்பு காரணமாக, தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியவர், இளைஞர்களுக்குக் கடந்த கால வரலாற்றைக் கூறும் பெட்டகமாகத் திகழ்ந்தார்.

2014-ஆம் ஆண்டில் அவர் மறைந்தபோது, மாவட்டக் கழகமே திரண்டு வந்து மரியாதை செய்தது. ‘வடகாடு தந்த கொள்கைச் சிங்கம்’ என முரசொலி ஏடு அவர் நினைவுகளைப் பதிவு செய்தது. அந்த நினைவுகள் அழிவதில்லை.

**...துடிக்கும்**


## சுயமரியாதைத் தண்ணீர்!

முரசொலி பாசறைப் பக்கத்தில் 27.02.2025 அன்று, வெளியான ‘ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்’ குறித்து, திட்டத்தின் பயனாளியாக தனது அனுபவத்தை, முகநூலில் பகிர்ந்துள்ளார் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த யாழ் திலீபன். அவரது பதிவில், “ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் வருவதற்கு முன் தருமபுரி மாவட்ட மக்களின் பற்களில் கறை இயல்பாக இருக்கும். வெளி ஊர்களுக்குச் சென்றால், ‘நீங்கள் தருமபுரிதானே’ என்று பற்கறையை வைத்தே அடையாளம் காணும்நிலை இருந்தது. குடிநீரில் ஃபுளூரைடு அதிகம் கலந்த நீரை, நாங்கள் பருகியதே அதற்குக் காரணம். கூட்டுக்குடிநீர் திட்டம் வந்த பிறகுதான், தருமபுரியின் கடைசிக் கிராமத்திற்கும் தண்ணீர் கிடைத்தது. பற்களில் கறையும் நீங்கியது.

இன்றும் இந்தத் தண்ணீர்தான் எங்களின் வறட்டுப் பூமியை நனைத்து வருகிறது. இத்திட்டத்தை மேலும் விரிவாக்கும் வகையில், மேட்டு நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தும் வகையில், தற்போதைய அரசு ஏரிகளுக்கும், குளங்களுக்கும் நீர் நிரப்பும் திட்டத்திற்கு ஒப்புதல் தந்திருக்கிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் மாவட்ட மக்களின் குடிநீர் வசதிக்கும், விவசாயத்திற்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் சிறப்பாகப் பயன்பட்டு வருகிறது.

வெறும் தண்ணீர் குழாய்கள்தானே என்று மற்றவர்கள் சாதாரணமாக எண்ணலாம். ஆனால், ஒருகாலத்தில் ‘ஆண்டை’ களுக்குத் தனிக்கிணறு இருக்கும். ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் தண்ணீர் தேவைக்கு 2 கிலோ மீட்டருக்கு மேல் அலைய வேண்டும். ஆனால், இப்போது எல்லோருக்கும் ஒரே குழாய் வழியாகத்தான் தண்ணீர் வருகிறது. எங்கள் வீட்டு வாசலுக்கே குடிநீர் வந்துவிட்டது. 15 அடி நடந்தால் போதும். தண்ணீருடன் சேர்த்து, சுயமரியாதையும் தந்திருக்கிறார் கலைஞர். கலைஞரின் இந்த சாதனையை என்றும் மறக்க மாட்டோம்” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாணவராக...



கி.இராஜமாணிக்கம்

1966-ஆம் ஆண்டு, ஜூன் மாதம், தஞ்சை, திலகர் திடலில் பந்தல் அமைத்து, ‘தமிழ்நாடு மாநில மாணவர் இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு’ நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இடதுபக்கம் தமிழ்நாட்டின் அதிசய விஞ்ஞானி ஜி.டி.நாயுடு அவர்களும், வலதுபக்கம் மாநாட்டுக்குத் தலைமை வகித்த நானும் இடம் பெற்றுள்ளோம். அண்ணா அவர்களை அடுத்து, கலைஞர் பேசிய இரண்டு நிகழ்வுகளில், இந்த மாநாடும் ஒன்று. மாநாடு குறித்து ‘முரசொலி’ கரிகாலன் பதில்களில், “கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை” என்ற பாவேந்தரின் பாடல் வரிகளை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது - என்று கலைஞர் குறிப்பிட்டிருந்தார். நான் பின்னாளில் அரசுப்பணி ஏற்று, ஆட்சிப்பணி அதிகாரியாகி, கலைஞரின் செயலாளராக 19 ஆண்டுகள் பணியாற்றி, அவரது வரலாற்றிலும் இடம்பிடித்தேன்.

**- கி.இராஜமாணிக்கம், இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (ஓய்வு), முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உலக அரங்கில் ஒலித்த குரல்!

2001-ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் தோகாவில், ‘உலக வர்த்தக அமைப்பு மாநாடு’ நடைபெற்றது. இந்தியாவின் சார்பில் கலந்துகொண்ட ஒன்றிய தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன், ‘வளரும் நாடுகளின் கோரிக்கைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்’ என குரல் கொடுத்தார். அதையடுத்து உலக வர்த்தக அமைப்பும் மாறனின் கோரிக்கையை விவாதிக்க வேண்டும் என முடிவு செய்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131